## 2025.09.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. 'உபசரிப்பின் உழைப்புப் படை' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

2030 ஆம் ஆண்டாகும் போது வருடாந்தம் 05 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் இலங்கைக்கு கவர்ந்திழுக்கும் வகையில் அரச மூலோபாய நோக்கத்தை அடைவதற்காக சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் துறையிலுள்ள பல்வேறு வகுதிகளில் பயிற்சி பெற்ற 800,000 பேர் தேவையென ஊகிக்கப்பட்டுள்ளது. ஆயினும், சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திடம் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ள வளங்கள் பயிற்றுவிப்பதற்கான இயலுமை இல்லை. எனவே, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் (TVEC) அத்தாட்சிப்படுத்தப்பட்ட நாடளவிய ரீதியில் அரச மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை ஈடுபடுத்தி "உபசரிப்பின் ஊழியப்படை" எனும் பெயரிலான தேசிய தொழிற்தகைமை (NVQ) 3 மட்ட 06 மாத தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கோட்பாட்டு ரீதியான அறிவு மற்றும் செய்முறைப் பயிற்சியையும் வழங்கி நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலானதும், பாரிய அளவிலானதுமான விருந்தினர் உபசரிப்பு தொழிற்றுறைக்கு ஏற்புடைய வகையில் ஆர்வங் காட்டும் இளைஞர் யுவதிகளுக்காக இப்பயிற்சி நடாத்தப்படவுள்ளது. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தினால் கல்விச் செயற்பாடுகளை நெறிப்படுத்தல் மற்றும் தரப் பாதுகாப்பைப் பேணிக்கொண்டு 60 நாட்களில் 360 மணித்தியாலயங்கள் உள்ளடங்கும் வகையில் 30 மாணவர்களைக் கொண்ட குழுக்களாக உத்தேச நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், ஒரு பங்குபற்றுநருக்கு 55,832.50 ரூபா செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டமாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களிலுள்ள இளைஞர் யுவதிகள் 20,000 பேருக்கு பயிற்சியை 2025 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2026 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கும், பின்னர் அரச தனியார் பங்குடமையின் கீழ் முகவரகங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் இணை அனுசரணை நிதி முறைமை மூலம் 80,000 பேருக்கு பயிற்றுவிப்பதற்கும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. கஹடகஹ காரிய சுரங்கத்தை அரச தனியார் பங்குடமையின் கீழ் பெறுமதி சேர் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

102 ஏக்கர் காணியில் அமைந்துள்ள கஹடகஹ கனிமச் சுரங்கமானது, இலங்கையின் ஆழமான காரிய கனியமணல் சுரங்கமாகும். முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனியான கஹடகஹ கிர∴பைட் லங்கா லிமிட்டட் இன் கீழ் குறித்த காரிய சுரங்கம் இயங்கி வருவதுடன், அதன்மூலம் உயர் தரத்திலான காரியத்தை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யப்படுகின்றது. கடந்த அரசின் கீழ் கஹடகஹ கிர∴பைட் லங்கா லிமிட்டட் மீள்கட்டமைப்பதற்குத்



163, කිරුලපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன்கீழ் அடையாளங் காணப்பட்ட முதலீட்டாளர் மூலம் கஹடகஹ சுரங்க காரியத்திற்கு பெறுமதி சேர் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென 2023.12.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயினும், அதற்கிணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. குறித்த சுரங்கத்தில் காணப்படும் சுரங்கத்தின் அளவைத் தீர்மானிப்பதற்கு உள்நாட்டிலுள்ள தொழிநுட்பம் போதியளவு இல்லையெனக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்விடயங்களைக் கருத்தில் கொண்டு, கஹடகஹ கிர.ஃபைட் லங்கா லிமிட்டட் இனை மீள்கட்டமைப்பு தொடர்பான மேற்கொள்ளப்பட்ட 2023.12.11 அன்றைய அமைச்சரவைத் தீர்மானத்தை இரத்துச் செய்து, கஹடகஹ சுரங்கத்திலுள்ள காரியத்தின் உரித்தை குறித்த கம்பனியே பேணிச் செல்வதற்கும் மற்றும் தற்போது அக்கம்பனியில் பணிபுரிகின்ற ஊழியர்களின் தொழிலைப் பாதுகாத்து, கஹடகஹ காரிய சுரங்க ஆராய்ச்சி, சுரங்கக் காரிய அகழ்வுகள், செயலாக்கம் மற்றும் காரியத்திற்கான பெறுமதி சேர்த்தல் போன்ற ஒட்டுமொத்த கருத்திட்டத்தையும் அரச தனியார் பங்குடமை முறைமையின் கீழ் அமுல்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடித்து, விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. குருநாகல் மலியதேவ கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கான புதிய மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல்

1888 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட குருநாகல் மலியதேவ கல்லூரியில் 4617 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். குறித்த கல்லூரியின் ஆரம்பப் பிரிவு ஓடுகளாலான கூரையால் நிர்மாணிக்கப்பட்ட மிகவும் பழைய ஒற்றைமாடிக் கட்டிடங்கள் 03 இல் இயங்கி வருகின்றது. அத்துடன், அங்கு காணப்படுகின்ற வசதிகள் மாணவர்களுக்குப் போதுமானதாக இல்லை. ஆரம்பப் பிரிவுக்கான நவீன வசதிகளுடன் கூடிய சிறுவர் நேயக் கட்டிடமொன்றின் தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 24 வகுப்பறைகள், செயற்பாட்டு அறை, 03 ஆசிரியர் ஓய்வறைகளுடனும், ஒவ்வொரு மாடியிலும் மலசலகூட வசதிகளுடன் கூடிய புதிய மூன்றுமாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அது 2026-2030 வரைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய முதலீட்டு வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள கட்டுமானக் கருத்திட்டமாகும். அதற்கமைய, 392 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டுச் செலவின் கீழ் 2026-2028 காலப்பகுதியில் குறித்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல்

2006 ஆம் ஆண்டில் அரச பல்கலைக்கழகங்களில் துணைச் சுகாதார விஞ்ஞானம் தொடர்பாக பட்டப்படிப்புக்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியல் மற்றும் தாதியம் தொடர்பான துறைகளில் மூன்று விஞ்ஞானமானி (கௌரவ) பட்டப்படிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைச் சுகாதார விஞ்ஞான பீடத்தில் அனைத்து

இனத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி நான்கு பாடத்துறைகளில் (மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியல், தாதியம் மற்றும் உடற்கல்வி) 952 மாணவர்கள் கற்கைகளில் ஈடுபடுகின்றனர். 2017 ஆம் ஆண்டில் துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பினும், நிலவிய நிதி நெருக்கடிகளால் அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. அதனடிப்படையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கு மோசமான உட்கட்டமைப்பு வசதிப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதனால், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான விரிவுரை மண்டபங்கள், ஆய்வுகூடம், ஆய்வுக்கட்டுரை அறை, ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபம் மற்றும் கேட்போர் கூடத்துடன் கூடிய புதிய ஐந்துமாடிக் கட்டிடமொன்றை 2,234 மில்லியன் மதிப்பீட்டுச் செலவில் நிர்மாணிப்பதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. பால் உற்பத்தித் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் கருத்திட்டம் மற்றும் இலங்கைக் கடற்படைக்கான உத்தியோகபூர்வ பாதுகாப்பு ஒத்துழைப்புக்களுக்கான கருத்திட்டங்களுக்கு ஜப்பான் அரசின் நன்கொடையைப் பெற்றுக் கொள்ளல்**

இருநாடுகளுக்கிடையில் நீண்டகாலமான ஒத்துழைப்புப் பின்னணியில் பால் உற்பத்தித் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் கருத்திட்டத்திற்கு 463 மில்லியன் ஜப்பான் ஜென் மற்றும் இலங்கைக் கடற்படைக்கான உத்தியோகபூர்வ பாதுகாப்பு ஒத்துழைப்புக்களுக்கு 500 மில்லியன் ஜப்பான் ஜென்களும் 963 மில்லியன்கள் (அண்ணளவாக 1.94 பில்லியன் ரூபாய்கள்) நிதியை நன்கொடையாக வழங்குவதற்கு ஜப்பான் அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. பால் உற்பத்தித் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் இயலளவை மேம்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்புக்களுக்கானஇலங்கைக் கடற்படைக்கான உத்தியோகபூர்வ பாதுகாப்பு ஒத்துழைப்புக்களுக்கான கருத்திட்டத்தின் கீழ் இலங்கை கடற்படையின் புலனாய்வு, அவதானிப்பு மற்றும் கண்காணிப்பு செயற்பாடுகளுக்கான ட்ரோன் கலன்கள் விநியோகிப்பதற்கான நிதியுதவி பெற்றுக்கொள்ளப்படவுள்ளன. கௌரவ ஜனாதிபதி அவர்களின் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது குறித்த திட்டங்களுக்குரிய பரிமாற்றுப் பத்திரங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களில் கையொப்பமிடவுள்ளதுடன், அதற்குரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்திற்கான அரசின் நெற் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம்**

2025 சிறுபோகத்திற்கான அரசின் நெற் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்காக 6,000 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.அதில் 5,288 மில்லியன்கள் ஏற்கனவே செலவிடப்பட்டு நெல் சந்தைப்படுத்தல் சபையால் 16 மாவட்டங்களில் 43,891 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. தற்போது அறுவடை இடம்பெற்று வரும் பொலன்னறுவை, அநுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் எஞ்சிய சிறுபோக அறுவடையைக் கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபை திட்டமிட்டுள்ளது. அதற்கமைய, அரசின் உத்தரவாத

விலையில் தொடர்ந்தும் 2025 சிறுபோகத்தில் விவசாயிகளிடமிருந்து நெற் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான மேலதிக நிதியொதுக்கீட்டுக்கு விவசாய, காலநடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. கொஹுவல மேம்பாலத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் கெட்டம்பே மேம்பாலத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பித்தல்**

ஹங்கேரிய அரசுடன் இலங்கை கையொப்பமிட்டுள்ள நிதி ஒத்துழைப்புக்கான வேலைச்சட்டக உடன்படிக்கையின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் நிதியைப் பயன்படுத்தி கொஹுவல மற்றும் கெட்டம்பே மேம்பாலத்தின் கட்டுமானக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அப்போது நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக ஹங்கேரியாவின் எக்சிம் வங்கியால் நிதி வழங்குவது இடைநிறுத்தப்பட்ட பின்னர் கொஹுவல மேம்பாலத்தின் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது வாகனப் போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தரைமட்டத்தில் வீதி பூர்த்தி செய்யப்படாமையால் பாதசாரிகள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். அவ்வாறே, கெட்டம்மே மேம்பால நிர்மாணச் செயற்பாடுகளும் கைவிடப்பட்ட நிலைமையிலேயே தொடர்ந்தும் உள்ளது. அதற்கமைய, தற்போதைய ஒப்பந்தக்காரர் மூலமான உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி கொஹுவல மேம்பாலத்தில் பூர்த்தி செய்யப்படாத தரைமட்ட வீதிப்புனரமைப்பைப் பூர்த்தி செய்வதற்கும், கெட்டம்பே மேம்பாலத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. லோட்டஸ் குறுக்கு நுழைவாயில் மற்றும் சுற்றியுள்ள பிரதேசங்களில் போக்குவரத்து நெரிசல்களைக் குறைப்பது பற்றிய சாத்தியவளக் கற்கையை மேற்கொள்ளல்**

கொழும்பில் அமைந்துள்ள லோட்டஸ் சுற்றுவட்டத்திற்கு அண்டிய பிரதேசங்களில் குறிப்பாக போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரங்களில் மோட்டார் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்ற இடமாக மாறியுள்ளதுடன், அதனால், நகரப் போக்குவரத்து வலையமைப்பில் மோட்டார் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக நகரம் மற்றும் துறைமுக நுழைவு மேல் வீதி முழுமையாக இயங்குநிலைக்கு கொண்டுவருவதும், கொழும்பு நகரத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்மு வருகின்ற முக்கிய அபிவிருத்திப் பணிகளைப் பூர்த்தி செய்வதால் இப்பிரச்சினை மேலும் மோசமடையுமெனக் கண்டறியப்பட்டுள்ளது. குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, துறைமுக நுழைவு மேல்வீதியின் சாய்வு மற்றும் கடலுக்கு அண்டிய வீதியை நீடித்தல் உள்ளிட்ட, இணைப்புச் செய்கின்ற பிரதான பாதையுடனான தொடர்பை மேம்படுத்தல் மற்றும் லோட்டஸ் சுற்றுவட்டப் பிரதேசத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான நிரந்தரத் தீர்வுகளைத் தயாரிப்பதற்கான விபரங்களுடன் கூடிய சாத்தியவளக் கற்கையை மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட பெறுகை முறைமைகளைக் கடைப்பிடித்து ஆலோசனைச் சேவை நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. றுவன்வெல்ல நீர் வழங்கல் திட்டத்தில் II ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

கொரஜயாவின் எக்சிம் வங்கியின் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் மற்றும் இலங்கை அரசினால் நிதியளிக்கப்படும் றுவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டத்தின் ஒப்பந்தம் கொரிய கம்பனியான M/s Kolon Global Corperation இற்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டம் 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிட்டிருப்பினும், கொறோனா தொற்று, திட்டத்தில் மாற்றங்கள் இடம்பெற்றமை, சீரற்ற காலநிலை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக உரிய வகையில் கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அப்போது நிலவிய பாரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் மீண்டும் மூலோபாயப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் பற்றிய குழுவால் இக்கருத்திட்டம் I மற்றும் II ஆக கட்டங்களாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கொரிய எக்சிம் வங்கியின் நிதி மற்றும் இலங்கை அரசின் நிதியைப் பயன்படுத்தி, றுவன்வெல்ல நீர் வழங்கல் திட்டத்தில் I ஆம் கட்டத்தின் கீழ் கட்டுமானங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ஒப்படைத்துள்ளார். குறித்த கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்திற்கான மொத்த செலவு மதிப்பீட்டுச் செலவை 2,147 மில்லியன் ரூபாய்களாக திருத்தம் செய்வதற்கும் இலங்கை அரச நிதியைப் பயன்படுத்தி குறித்த கட்டப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகரம் வழங்கியுள்ளது.

**10. பேண்தகு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

சுற்றுலாத்துறைக்கு துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் 100 மில்லியன் கடன்தொகையை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கடன் தொகையில் 70 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொள்கைக் கூறுகள் அடிப்படையிலான கடன் மற்றும் முதலீட்டுக் கூறாகவும் இரண்டு கூறுகளைக் கொண்டமைகின்றது. முதலீட்டுக் கூறின்கீழ் திருகோணமலை மற்றும் தம்புள்ள (சிகிரியா பிரதேசம் உள்ளடங்கலாக) சுற்றுலா கிராமங்களில் சுற்றுலா ஆற்றல்வளங்கள் மற்றும் தெரிவு இயலளவை அதிகரித்தல் சுற்றுலா நெரிசலைக் கட்டுப்படுத்தல், தங்குயிருக்கும் காலத்தை நீடித்தல் மற்றும் சுற்றுலாத் தொழிற்றுறை மூலமாக பிரதேச பொருளாதாரத்திற்கு கூடுதலான பங்களிப்பைப் பெறுவதற்குத் தேவையான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட முதலீட்டுக் கூறின் கீழான கருத்திட்டங்களை அமுல்படுத்தும் முகரகம் மற்றும் நடைமுறைப்படுத்தும் நிறுவனம் என்ற ரீதியில் நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சு இயங்குகின்றது. அதற்கமைய, உத்தேச கடன்தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான குறித்த கடன் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும் மற்றும் நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகரம் வழங்கியுள்ளது.

## 11. அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு அத்தியாவசிய மருத்துவ விநியோகங்களுக்கான பெறுகை

2025 ஆம் ஆண்டுக்கான அவசியமான மருத்துகள் மற்றும் ஏனைய மருத்துவ விநியோகங்கள் 291 இற்கான அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து வியாபார ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுடனான பிற்கொள்வனவு ஒப்பந்தம் செய்துள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு மருத்துவ விநியோகப் பிரிவுக்கு நேரடியாகக் கொள்வனவு செய்வதற்காக 2024.12.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், கையிருப்பிலுள்ள ஒருசில மருத்துத் தொகைகளின் தரமின்மை காரணமாக அல்லது காலாவதியாதல், தற்காப்பு தொகையைப் பேணிச் செல்வதற்கு தேவையாயிருத்தல், ஒருசில மருந்துகளின் பாவனை அதிகரித்தமை போன்ற காரணங்களால் எதிர்வுகூறலின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ஒருசில கொள்வனவுக் கட்டளைகள் போதாதிருப்பதுடன், குறித்த மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவ விநியோகங்களில் 123 வகுதிகள் மேலதிக கையிருப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை உருவாகியுள்ளது. அதற்கமைய, கீழ்வரும் வகையில் தேசிய ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகைகளை வழங்குவதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- 24 மருந்து வகைகளுக்கான பெறுகையை அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு 1.148 பில்லியன் ரூபாய்களுக்கு வழங்குதல்
- 68 மருந்து வகைகளுக்கான பெறுகையை அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்த வியாபார ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு 4.159 பில்லியன் ரூபாய்களுக்கு வழங்குதல்
- 62 மருந்து வகைகளுக்கான பெறுகையை சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுடன் பிற்கொள்வனவு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு 5.116 பில்லியன் ரூபாய்களுக்கு வழங்குதல்

## 12. வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் வாக்களிக்கக்கூடிய வகையில் சட்டத்தை தயாரித்தல்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 3 ஆவது உறுப்புரைக்கமைய, மக்கள் மீதான மக்கள் இறைமை அதிகாரம் மக்களால் 4 ஆவது உறுப்புரையின் ஏற்பாட்டின் பிரகாரம் தேர்தலின் போது நடைமுறைப்படுத்தப்படும். வாக்கு அதிகாரம், தேர்தல் சட்டத்திற்கமைய இலங்கையில் வசிக்கின்ற மற்றும் தேருநர் இடாப்பில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள பிரஜைகளுக்கு மாத்திரமே உண்டு. சமகால தேர்தல் சட்டங்களின் கீழ் வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பிரஜைகளுக்கு வாக்களிப்பதற்கான முறைகளோ அல்லது சட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. ஆயினும், இந்தியா, பங்களாதேசம், பிலிப்பைன் போன்ற பல ஆசிய நாடுகள் தமது வெளிநாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வாக்களிக்கக்கூடிய வகையில் சட்டரீதியான மூலோபாயங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையிலும் அவ்வாறான சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய,

வெளிநாட்டிலுள்ள பிரஜைகளின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக தற்போதுள்ள சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அல்லது புதிய சட்டத்தைத் தயாரிப்பதற்கான விடயங்களை ஆராய்வதற்காக தேர்தல் ஆணைக்குழு, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, பொதுநிருவாக, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் ஏனைய ஏற்புடைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் அலுவலர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்காக பொதுநிருவாக, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்திற்கான மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் பதவிக்கு நியமித்தல்**

மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்திற்கான மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபராக பணியாற்றிய இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான, திருமதி. ஜே.ஜே.முரளிதரன் அவர்கள் 2025.09.26 அன்று அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். அதற்கமைய, வெற்றிடமாகின்ற மட்டக்களப்பு நிர்வாக நிர்வாக மாவட்டத்திற்கான மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் பதவிக்கு தற்போது கிழக்க மாகாண ஆளுநர் செயலாளராக பணிபுரிகின்ற இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான, திரு. ஜே.எஸ்.அருள்ராஜ் அவர்களை அன்றைய தினம் தொடக்கம் நியமிப்பதற்காக பொதுநிருவாக, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் - 2026**

2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2025.09.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, பாராளுமன்ற முதற்கோலாசான் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள,2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பாக கீழ்வஜம் நிகழ்ச்சித்திட்டங்களை பிரதமர் அவர்களால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

- பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் முதலாம் வாசிப்பு - 2025.09.26
- பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு (வரவு செலவுத்திட்ட உரை) - 2025.11.07
- இரண்டாம் வாசிப்பு வரவு செலவுத்திட்ட விவாதம் - 2025.11.08 தொடக்கம் 2025.11.14 வரை
- பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பு வரவு செலவுத்திட்ட விவாதம் - 2025.11.15 தொடக்கம் 2025.12.05 வரை
- வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பு – 2025.12.05

**15. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சீட்டாட்டம் மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக 2025 வரவு செலவுதத்திட்ட முன்மொழிவு மூலம் கீழ்க்காணும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- மொத்தக் கூட்டுத்தொகை அடிப்படையிலான வரி 15% வீதம் தொடக்கம் 18% வீதம் வரை அதிகரித்தல்
- இலங்கைப் பிரஜைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கசினோ நுழைவு வரி 50 டொலர்கள் தொடக்கம் 100 டொலர்கள் வரை அதிகரித்தல்

அதற்கமைய, குறித்த முன்மொழிவு நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் 1988 ஆம் ஆண்டின் 40 ஆம்இலக்க சீட்டாட்டம் மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு சட்டவரைஞரால் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, திட்டமிடல் மற்றும்பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**16. செவனகல சீனி தொழிற்சாலையில் கரும்புச் செய்கை தீ வைக்கப்பட்டமையால் பயிர் அழிவுகள் ஏற்பட்ட கரும்பு விவசாயிகளுக்கான நட்டஈடு வழங்குதல்**

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனிக்குச் சொந்தமான செவனகல சீனி தொழிற்சாலையின் கரும்புச் செய்கைக்கு ஒருசிலரால் 2025 ஆகஸ்ட் 16, 20, 21, 22, 24 மற்றும் செப்டம்பர் 04 மற்றும் 05ஆம் திகதிகளில் தீ வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனால் 235 விவசாயிகளுக்குச் சொந்தமான 19,000 மெற்றிக்தொன் கரும்பு அழிவடைந்துள்ளமை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தீயால் அழிவடைந்துபோன கரும்புகள் முதலாவது 24 மணித்தியாலங்களில் அரைக்கப்பட வேண்டியிருப்பதால், தீ வைப்பால் அழிவடைந்துபோன கரும்பை கொள்வனவு செய்து அரைப்பதற்கு 2025.08.30 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. அக்காரணமாக கரும்புச் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன் பாதிக்கப்பட்ட செய்கைகளுக்கு நட்டஈடு வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அதற்கமைய தீ வைப்பால் அழிவடைந்து போயுள்ள திட்டவட்டமான கரும்புத் தொகையை மற்றும் பயிர் அழிவுகள் ஏற்பட்டுள்ள கரும்பு விவசாயிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி அதிகாரிகளுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கும் தீவைப்பால் அழிவடைந்து போயுள்ள ஒரு மெற்றிக்தொன் கரும்பு அழிவுக்காக 7000 ரூபா வீதம் நட்டஈட்டுத் தொகையை குறித்த விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்களும் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 17. “சிறுவர்தின தேசிய வாரம்” பிரகடனப்படுத்தல்

இலங்கை உள்ளிட்ட அதிகமான நாடுகள் ஒக்றோபர் மாதம் 01 ஆம் திகதி ‘‘உலக சிறுவர் தினம்’’ கொண்டாடப்படுகின்றது. இவ்வாண்டு ‘‘அன்புடன் காப்போம் - உலகை வெல்வோம்’’ எனும் தொனிப்பொருளின் கீழ் சிறுவர் தொடர்பாக இயங்குகின்ற அனைத்து நிறுவனங்களும் இணைந்து மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் நெறிப்படுத்தலில், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டக் கோவையை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. உலக சிறுவர் தின தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக 2025 செப்ரெம்பர் 25 ஆம் திகதி தொடக்கம் 2025 ஒக்றோபர் 01 ஆம் திகதி வரை பிரதான தேசிய வைபவம் உள்ளிட்ட செயற்பாட்டுத்திட்டம் “சிறுவர் தின தேசிய வாரம் - 2025” எனப் பிரகடனப்படுத்துவதற்கும், அதன்கீழ் கீழ்க்காணும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| **திகதி** | **வேலைத்திட்டம்** |
|---|---|
| 2025-09-25 | சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் பாடசாலை அதிபர்களின் வகிபாங்கு தொடர்பாகத் தெளிவூட்டல். – (கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு) |
| 2025-09-26 | புாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற மோட்டார் வாகனங்களை நாடளாவிய ரீதியில் சோதனை செய்தல் மற்றும் ஸ்ரிக்கர் ஒட்டுதல் - (இலங்கை பொலிசு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு) |
| | புாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுவை உருவாக்குதல் மற்றும் மீளமைத்தல் - (கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை) |
| 2025.09.27 | சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்பள்ளி ஆசிரியர்களின் வகிபாங்கு பற்றி முன்பள்ளி ஆசிரியர்களைத் தெளிவூட்டல் - (முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தேசிய செயலகம்) |
| 2025.09.28 | பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு உட்படுவதைத் தடுத்தல் பற்றி சமூகத்தைத் தெளிவுபடுத்தல் - (இலங்கை பொலிசு, அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்) |
| 2025-09-29 | சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் சமயத் தலைவர்களின் பணிப்பொறுப்புக்கள் பற்றி தெளிவூட்டல் - (புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சு) |
| | குடும்பத்தாருடனான மகிழ்ச்சியூட்டும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடாத்துதல் - (கலாச்சார விவகார திணைக்களம்) |
| 2025.09.30 | சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் (01 – 05 ஆம் தரம்) – (சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு) |
| 2025-10-01 | உலக சிறுவர் தின தேசிய வைபவம் |

| | |
|---|---|
| வாரம் முழுவதும் | பாதுகாப்பற்ற நிலையிலுள்ள பிள்ளைகளை அடையாளங்காணல் மற்றும் வீதியோரச் சிறுவர்களை சோதனை செய்வதற்குரிய சுற்றி வளைப்புக்களை நடாத்துதல் - (இலங்கை பொலிஸ் திணைக்களம்) |

**18. சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (திருத்தச்) சட்டம்**

2025 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள வரிக் கொள்கைத் திருத்தத்திற்கு சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்திற்கான திருத்தம்உள்ளடங்கலாக சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (திருத்தச்) சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**